முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1173

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.12.2022,** வியாழக்கிழமை

1. பிரம்ம சூட்சுமமே அரங்கா வாழ்க
   பிரம்ம சக்தியே தேசிகா வாழ்க
   வரம்பல பெற்று என் அவதாரமாக
   வையகத்தில் அற்புதம் நடத்துகின்ற அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு இன்னும் சக்தி கூட
   தாழ்வில்லா ஞான அறிவுரை ஆசிதன்னை
   தக்கதொரு சுபகிருது தேள் திங்களில் உரைப்பேன்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 29 ம் நாள் 15.12.2022, வியாழக்கிழமை)
3. உரைக்கவே அரங்கனால் இந்த உலகம்
   உயர்வான நல்மாற்றம் காணக்கூடும்
   குறைவின்றி அரங்கன் தருகின்ற தர்மத்தால்
   குவலயமே தர்மபலம் கூடி பாதுகாப்பை பெறும்
4. காப்புதரும் மகா சக்தியாக
   கருணைகொண்டு தன் பிறவித் தொடர்புள்ள
   பெருமைமிக்க தொண்டர்களை ஒன்றிணைத்து
   பேருலகை மாற்றும் மகா சேவையை
5. சேவையை என் வழிபாடாக
   சரவணச்சுடரேற்றி உலகமெல்லாம்
   அவனிகாக்கும் அற்புதம் நிகழ்த்தி வர
   அரங்கனே உன்னால் இந்த மாற்றம்
6. மாற்றம் சடுதி உலகம் காணும்
   மக்களெல்லம் அமைதி பாதுகாப்பு கண்டு
   ஆற்றல்பட ஞானவான்களாக
   அரங்கன் உன்னால் வரும் காலமதில் ஞானிகளாகவே மாற்றும்
7. மாற்றம் தனை அனைவரும் அடைவரப்பா
   மண்ணுலகம் பாதுகாப்புப் பெருகுமப்பா
   அப்பனே அரங்கன் நீ என் சூட்சுமவடிவான
   அகிலத்தை காக்கும் தனி அவதாரம்
8. ஒப்புகொண்டோர் எல்லோரும் இந்த உலகில்
   ஓங்காரபலம் பெற்று சிறக்க நேரும்
   நேர்மைகொண்டு அவர்களெல்லாம் நிலவுலகில்
   நீதிகாக்கும் சக்திமிக்கவர்களாக
9. வறுமைவென்று உலகையே தர்மவழி
   வழிநடத்தும் ஞானவான்களாக உயர நேரும்
   நேர்மைகொண்டு உன்வழி உலகோர் வந்தால் நிலவுலகம் சடுதி மாற்றம் காணும்
   பெருமைபட ஆறுமுகன் யான் பிரம்மவேளையில் அதீத சக்திகள் உமக்கு தொடர்ந்து வழங்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–